# நல்லவை நாற்பது

## குகையூர்த் தமிழ்ச் சங்கம்

வெளியீடு - 2




உரையாசிரியர்


திருமூலரின் முத்தமிழ் வேத சதாசிவர்

**பேராசிரியர் திரு அடிகளாசிரியர்**



திருமூலரின் முத்தமிழ் வேத சதாசிவர்

பேராசிரியர் **திருஅடிகளாசிரியர்**



D134

செந்தமிழ்க் காவலர், கபிலவாணர் தமிழ்மாமணி

புலவர் **க. சுப்பிரமணியன்**

பெங்களூர்த் தமிழ்ச் சங்கம், குகையூர்த் தமிழ்ச்சங்கம்
நிறுவனரும், சங்க ஆலோசகரும்

# நல்லவை நாற்பது

உரையாசிரியர்

திருமூலரின் முத்தமிழ் வேத சதாசிவர்
பேராசிரியர் திரு **அடிகளாசிரியர்**

பதிப்புக்குழு :

**குகையூர்த் தமிழ்ச் சங்கம்,**

**குகையூர்-606 306.**

கல்லக்குறிச்சி வட்டம்.

## நூல் குறிப்பு

| | | |
|---|---|---|
| பெயர் | : | நல்லவை நாற்பது |
| உரையாசிரியர் | : | திரு அடிகளாசிரியர் |
| பதிப்பு | : | பிப்ரவரி 2005 |
| அளவு | : | டெம்மி 1/8 |
| பக்கங்கள் | : | 48 |
| விலை | : | உரூ. 20/- |
| படிகள் | : | 1100 |
| வெளியீட்டகம் | : | குகையூர்த் தமிழ்ச் சங்கம்,<br>குகையூர் - 606 306.<br>கல்லக்குறிச்சி வட்டம்.<br>விழுப்புரம் மாவட்டம்.<br>04282 - 239361, 239414. |
| அச்சகம் | : | லிபர்ட்டி பிரிண்டர்ஸ்,<br>58. தினசரி மார்க்கெட்,<br>கல்லக்குறிச்சி - 606202.<br>விழுப்புரம் மாவட்டம்.<br>04151-223017. |
| உரிமை | : | குகையூர்த் தமிழ்ச் சங்கம்<br>குகையூர். |

# பதிப்புரை

தமிழ்மொழி,கலை,பண்பாடு,நாகரிகம் ஆகியவற்றை வளர்க்கும் நோக்கத்தோடு, திருமூலரின் முத்தமிழ் வேத சதாசிவர் பேராசிரியர் திரு **அடிகளாசிரியர்** அவர்களும், செந்தமிழ்க் காவலர் புலவர் திரு **சுப்பிரமணியன்** அவர்களும், மற்றும் பல தமிழன்பர்களும் ஒன்று கூடி 30-10-1998 வெள்ளிக்கிழமை அன்று திருவருள் நிலையத்தில் "**குகையூர்த் தமிழ்ச்சங்கம்**" என்ற ஓர் அமைப்பைத் தொடங்கினர்.

குகையூர்த் தமிழ்ச்சங்கம் தனக்கென ஓர் கட்டிடம் கட்டிக்கொள்ள, குகையூர் ஊராட்சி மன்றம், 5 செண்ட் நிலத்தைக் கொடையாக வழங்கியுள்ளது. அச்சங்க மனையில் சங்கக் கட்டிடம் கட்ட நிதி தேவை. இலக்கிய நூல்கள் வெளியிடுவதன் மூலமாகவும், கொடையுள்ளம் படைத்த வள்ளல்கள் மூலமாகவும், நாடகம், நாட்டியம், நடத்துவதன் மூலமாகவும் நிதியினைத் திரட்டலாம் என்றும், முதலில் இலக்கியநூல்கள் வெளியிடுவதன் மூலம் நிதியைத் திரட்டலாம் என்றும், தமிழ்ச்சங்கத் தலைவர் திரு **அடிகளாசிரியர்** கூறினார். அதன்படி அவர்கள் திருமூல ஔவையார் அருளிய **நல்வழி** என்ற நல்ல நூலுக்கு மிகச்சிறந்த உரை ஒன்றை எழுதித் தமிழ்ச் சங்கத்திற்குக் கொடுத்தார்கள். அந்நூல் 3-08-2000-இல் தமிழ்ச் சங்கத்தின் முதல் வெளியீடாக வந்தது.

குகையூர்த் தமிழ்ச் சங்கத்தின் இரண்டாவது வெளியீடாக '**நல்லவை நாற்பது**' என்ற நூல் வெளிவருகிறது. பேரா. திரு *அடிகளாசிரியர்* அவர்கள், *நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, ஆசாரக்கோவை, சிறுபஞ்சமூலம், ஏலாதி, திரிகடுகம், பழமொழிநானூறு, திருமந்திரம்* ஆகிய நூல்களிலிருந்து நல்ல கருத்தமைந்த நாற்பது பாடல்களைத் தேர்ந்தெடுத்து அப்பாடல் களுக்குத் தெளிவான உரையெழுதி "**நல்லவை நாற்பது**" என்று பெயரிட்டு சங்கத்திற்கு அளித்துள்ளார்கள். அதனோடு உரூ.1000-00 நன்கொடையாகவும் வழங்கியுள்ளார் என்பது சிறப்பிற்குரிய, குறிப்பிடத்தக்கதோர் செய்தியாகும். 95-ஆம் வயதிலும் தமிழ்த்தொண்டு புரியும் அவர் உடல்நலத்தோடு நூறையும் தாண்டி வாழவேண்டி, சங்கம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

இந்நூலை அனைவரும் காசு கொடுத்து வாங்கி சங்க வளர்ச்சிக்கு உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

குகையூர்த் தமிழ்ச் சங்கத்திற்கென ஓர் இலச்சினை வேண்டும் என்று கேட்டோம். எங்கள் வேண்டுகோளை ஏற்று, அழகிய கலைநுணுக்கத்தோடு கூடிய ஓர் இலச்சினையை முன்னாள் **பெங்களூர்த் தமிழ்ச் சங்கத்தின் தலைவர், குகையூர்த் தமிழ்ச் சங்கத்தின் ஆலோசகர், புலவர் திரு க.சுப்பிரமணியம்** அவர்கள் கொடுத்துள்ளார்கள். மேலும் சங்க வளர்ச்சிக்கு அவ்வப்போது சிறந்த ஆலோசனைகளையும் வழங்கி வருகிறார்கள். அன்னாருக்குச் சங்கம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது. இந்நூலை, வயது முதிர்ந்த காரணத்தால் சங்கத் தலைவரால் எழுத இயவில்லை. ஆகவே அவர் சொல்லச் சொல்ல எழுதிய ***திரு முருகேசன்*** அவர்களுக்கும் அச்சு நகலை எழுதிய ***திரு சு. மோகனசுந்தரம்*** அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

'சோலைக்குயில்' ஆசிரியர் திரு **கல்லைகவிமுரசு** அவர்களும், 'குறள்மணம்' ஆசிரியர் புலவர் திரு **செ.வரத ராசனார்** அவர்களும் மெய்ப்புக்களைத் திருத்தி உதவினார்கள். இவர்களுக்கும் தமிழ்ச் சங்கம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

இந்நூலை அழகான முறையில் அச்சிட்டு வழங்கிய **கல்லக்குறிச்சி லிபர்ட்டி அச்சக உரிமையாளர் திரு காமராசு அவர்களுக்கும், அவரது துணைவியார் திருமதி மணிமேகலை காமராசு** அவர்களுக்கும் சங்கம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.



# தலைவர் முன்னுரை

குகையூர் என்னும் கூகையூரில் பிறந்த **அடிகளாசிரியனாகிய** யான் மயிலத்தில் பணி புரிந்தபொழுது அங்குள்ள முருகன் செந்தமிழ்க் கழகத்திலும் பின் கரந்தையில் பணிபுரிந்த பொழுது கரந்தைத் தமிழ்ச் சங்கத்திலும், தொண்டனாய்த் தமிழ்த் தொண்டு புரிந்துள்ளேன்.

குகையூரில் பிறந்த என் மாணவரும், என் தம்பியும் ஆகிய திரு **க.சுப்பிரமணியன்** என்பவர் பெங்களூர்த் தமிழ்ச்சங்கம் என்ற ஒன்றை நிறுவி, அதனை நல்லமுறையில் வளர்த்து வருகின்றார். நாங்கள் இருவரும் சந்தித்தபொழுது நாங்கள் பிறந்த ஊராகிய குகையூரிலும் தமிழ்ச் சங்கம் ஒன்று வைத்து நடத்த வேண்டும் என்று கருதினோம். இக்கருத்தைக் குகையூர்ப் பொது மக்களிடத்தே எடுத்துக் கூறினோம். அவர்களும் அதற்கு இசைந்தார்கள்.

பொதுநல விருப்பமுள்ள குகையூர்ப் பொதுமக்களும், திரு **அடிகளாசிரியனாகிய** யானும், திரு **க.சுப்பிரமணியன்** என்பவரும் சேர்ந்து, குகையூரில் திருவருள் நிலையத்தில் 30-10-1998 தேதியில் **குகையூர்த் தமிழ்ச்சங்கம்** என்ற ஒன்றை உண்டாக்கினோம். இதனை முறைப்படி கள்ளக்குறிச்சியில் உள்ள பதிவகத்தில் பதிவு செய்து கொண்டோம். பின்னர் உயர்திரு **மா.பெரியசாமி** அவர்கள் ஊராட்சி மன்றத் தலைவராக இருந்தபோது கிராமப் பொது நிலத்தில் தமிழ்ச்சங்கக் கட்டிடம் கட்டுவதற்கு 5 செண்ட் நிலத்தைக் கொடுத்துதவினார். அதற்கு முயன்று பட்டாவும் வாங்கிக் கொண்டோம்.

ஔவையார் அருளிய **நல்வழி**க்குப் பாடபேதத்துடன் உரை எழுதி, சங்க வெளியீடாக வெளிட்டோம். அதற்கு வெளியீட்டு விழாவும் செய்தோம். குகையூர்த் தமிழ்ச் சங்கத்தில் இரண்டாவது முறையாக இப்போது, தலைவர், துணைத்தலைவர், செயலாளர், பொருளாளர், செயற்குழு உறுப்பினர் இவர்களைத் தேர்ந்து எடுத்துக் கொண்டோம்.

குகையூர்த் தமிழ்ச்சங்கத் தலைவராகிய யான் **நல்லவை நாற்பது** என்கின்ற தொகை நூலைத் திரட்டி உரை எழுதி சங்க வெளியீடாக வெளியிட்டுக் கொள்ளும்படி கொடுத்துள்ளேன். இவ்வெளியீட்டை உயர்திரு செயலாளர் **ரெங்கசாமி** அவர்களும், புலவர் **கு.குருநாதன்** அவர்களும் பதிப்புக் குழுவினராய் இருந்து நல்லமுறையில் அச்சிட்டு சங்கத்திற்குக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இந்நூலைத் தொகுப்பதற்கு உடனிருந்து எழுதி உதவிய குகையூர் திரு **சி.முருகேசன்** அவர்கட்கும், அச்சுக்காப்பி எழுதி உதவிய சின்னசேலம் திரு **கு.மோகன சுந்தரம்** அவர்கட்கும் என்னுடைய வாழ்த்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்ஙனம்,

**பேராசிரியர் திரு அடிகளாசிரியர்,**

**குகையூர்த் தமிழ்ச்சங்கத் தலைவர்.**

## வேண்டுகோள் !

பேரன்புடைய குகையூர்ப் பொதுமக்களே! மக்களுக்கு நல்ல கருத்தை உணர்த்துகின்ற **நல்லவை நாற்பது** என்கின்ற நூலை உரையுடன் வெளியிடுகின்றோம். இதனைப் படித்துப்பார்த்து, இதன் கருத்தை உணர்ந்து கொள்வதோடு அன்றி, இதன் அச்சுப் பிரதியைப் பலரும் முயன்று விற்பனை செய்தால் சங்கத்திற்குப் பொருள்வளம் கிட்டும். மக்களுடைய உள்ளத்திலும் நல்ல உணர்வு உண்டாகும்.

இங்ஙனம்,

**குகையூர்த் தமிழ்ச்சங்கத்தார்,**

**குகையூர்.**

## நன்றி !

குகையூர்த் தமிழ்ச்சங்கத் தலைவராகிய யான் **நல்லவை நாற்பது** என்கின்ற தொகை நூலைத்திரட்டி உரை எழுதி சங்க வெளியீடாக வெளியிட்டுக் கொள்ளும்படி கொடுத்துள்ளேன். இவ்வெளியீட்டை உயர்திரு செயலாளர் **இரெங்கசாமி** அவர்களும், முனைவர் **அ.சிவபெருமான்** அவர்களும், புலவர் **கு.குருநாதன்** அவர்களும் பதிப்புக் குழுவினராய் இருந்து நல்லமுறையில் அச்சிட்டு சங்கத்திற்குக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இந்நூலைத் தொகுப்பதற்கு உடனிருந்து எழுதி உதவிய குகையூர் திரு **சி.முருகேசன்** அவர்கட்கும், அச்சுக்காப்பி எழுதி உதவிய சின்னசேலம் திரு **குக.மோகன சுந்தர்** அவர்கட்கும் என்னுடைய வாழ்த்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்ஙனம்,

**பேராசிரியர்திரு அடிகளாசிரியர்,**
**தலைவர் குகையூர்த் தமிழ்ச்சங்கம்.**

# ‘தொண்டு’

இந்த உலகில் பல மக்கள் வாழ்கின்றனர். அவர் ஒவ்வொருவரும் வெவ்வேறுபட்ட கருத்தினராய் இருப்பர்; ஒருவன் தானும் தன் குடும்பமும் வாழ்ந்தால் போதும், ஏனைய மக்கள் எப்படி இருந்தால் என்ன என்ற கருத்துக் கொண்டு பிறர்க்குத் தீங்கினையும் செய்வான். இத்தகையானை அறிஞர் தன்னலம் கருதுபவன் என்பர்.

மற்றொருவன் தானே அன்றி உலகத்திலுள்ள எல்லா மக்களும் தன்போல் நன்கு வாழவேண்டும் என்று கருதுவான் கருதியதோடன்றி அதனைச் செயலாலே செய்வான். இப்படித் தானும், உலகமும் நன்றாக வாழவேண்டும் என்று கருதி செயல் செய்பவனைப் பிறர்நலம் கருதுபவன் என்பர் அறிஞர் பெருமக்கள்.

-புறநானூற்றுப் பாடல் பகுதியை ஒப்புநோக்குவோமாக.

**உண்டால் அம்ம இவ்வுலகு**
**தமக்கென முயலா நோன்றாள்**
**பிறர்க்கென முயலுனர் உண்மை யானே!**

எனவே, பிறர் நலம் கருதும் பேராண்மை உடையவர், பிறர்நலம் கருதி செய்யும் செயலுக்கே தொண்டு என்று பெயராகும்.

தொண்டு, பணி என்பன ஒரு பொருட்சொற்கள். தொண்டு என்பதற்கு ஒடுக்கம் என்று பொருள். தொண்டு செய்கின்ற ஒருவன் மனமும், சொல்லும், செயலும் வேறுஒன்றில் சென்று விடாமல் எடுத்த செயலிலேயே ஒடுங்கி இருக்குமாறு செயலைச் செய்திட வேண்டும் என்க. தொண்டு என்பதற்குப் ‘**பணிவு**’ என்று பெயர்.

தான் எடுத்துக்கொண்ட செயலை ‘**நான்**’ என்ற முனைப்பின்றி, பணிவாகச் செய்ய வேண்டும். எனவே, தொண்டு செய்பவரெல்லாம் அடங்கி, ஒடுங்கிப் பணிவாகச் செய்ய வேண்டும் என்பதாயிற்று.

# தொண்டின் வகை

தொண்டு, உயிர் பற்றியது என்றும் உடம்பு பற்றியது என்றும் இரண்டு வகைப்படும். உயிர்பற்றிச் செய்யும் தொண்டை, அறிஞர் ஆன்மீகத் தொண்டு என்பர். உடல் பற்றியத் தொண்டை, உலகத்தொண்டு அல்லது சமுதாயத் தொண்டு என்பர். ஆன்மீகத் தொண்டானது குருவுக்குச் செய்யும் தொண்டு என்றும் கடவுளுக்குச் செய்யும் தொண்டு என்றும் அடியார்களுக்குச் செய்யும் தொண்டு என்றும் மூவகைப்படும். உலகத்தொண்டு பல வகைப்படும் அவற்றுள் மக்களுடைய **1. அறியாமையை நீக்குதல், 2. வறுமையை நீக்குதல், 3. பிணியை நீக்குதல்** என்று மூன்று வகைப்படும் என்க.

அறியைமையை நீக்குவதற்குக் கல்வி இன்றியமையாதது. வறுமையை நீக்குவதற்குச் செயல் இன்றியமையாதது. பிணியை நீக்குவதற்கு நலவாழ்வு (சுகாதாரம்) இன்றியமையாதது ஆகும். தொண்டு என்பது மேலே கூறியவாறு பல செய்திகளை உள்ளடக்கியிருக்கின்றது.

இங்ஙனம்,

குகையூர் **கி. முருகேசன்** ஏம்.ஏ.,

செயற்குழு உறுப்பினன்.



உ

இறைவன் துணை

# நல்லவை நாற்பது

## குகையூர்த் தமிழ்ச் சங்கம்

## வெளியீடு - 2

### தற்சிறப்புப்பாயிரம்

நல்லநாயக தெய்வத்தின் வணக்கமும்
செயப்படு பொருளும்.

**நல்லன நினைத்தே நல்லன மொழிந்தே**
**நல்லன செய்திட அருளும்**
**நல்லநா யகப்பேர் நண்ணிடும் எங்கள்**
**நல்லருள் தெய்வமே போற்றி**
**நல்லன அமைந்த நாற்பது பாட்டை**
**நாங்கள்தாம் தொகுத்துஉரை எழுதி**
**நல்லநற் பதிப்பாய் வெளியிட நினைத்தோம்**
**நல்லருள் துணைதரு வாயே!**

- ஆசிரியர்

***கருத்து*** :-

இப்பாட்டு நூலாசிரியனாகிய தன்னால் இயற்றப்பட்டதாகலின் **தற்சிறப்புப்பாயிரம்** எனப் பெயர்பெற்றது.

'தெய்வ வணக்கமும் செயப்படு பொருளும்' எய்த உரைப்பது தற்சிறப்பாகும் என்பது விதி.

***பொழிப்பு*** :-

நாட்டிற்கு வேண்டும் நல்ல பொருளையே கருதி, கருதிய அவற்றையே சொல்லால் சொல்லி, கருதிய சொல்லிய அவற்றைச் செயலால் நன்றாக முடிவதற்கு அருள்செய்கின்ற நல்ல நாயகத் தெய்வமே! உன்னைப் போற்றுகின்றோம்.

நல்ல பொருள் தருகின்ற நாற்பது பாட்டினை நாங்கள் பல நூல்களிலிருந்து தேர்ந்து எடுத்துத் தொகுத்து, உரையும் எழுதி ஒரு தொகைநூலாக அமைத்து, பதித்து வெளிடக் கருதியுள்ளோம்.

எங்களுக்கு உன்னுடைய நல்ல அருளைத் துணையாகத் தருவாயாக என்று வேண்டுகிறோம்.

**அன்பு தோன்றின் ஆர்வம்வரும்**
**ஆர்வம் வந்தால் இன்சொல்வரும்**
**இன்சொல் வந்தால் நண்புவரும்**
**இவைதாம் இருப்பின் நாட்டிலுள்ளார்**
**முன்பு நின்று உறவாவர்;**
**முற்றும் அவர்தம் உறவாலே**
**நண்பு தோன்றும் நற்செயலை**
**நன்றாய்ச் செய்ய நலம்வருமே!**

- ஆசிரியர்

***பொழிப்பு*** :-

ஒருவரிடம் அன்பு தோன்றுமேயானால் விருப்பம் தோன்றும்; விருப்பம் தோன்றின் அவரிடம் இன்சொல் தோன்றும்; இன்சொல் தோன்றின் எல்லோரிடத்தும் நட்பு கொள்கின்ற நட்புணர்ச்சித் தோன்றும். மேலே சொன்ன அன்பு முதலான நான்கும் ஒருவரிடம் இருக்குமேயானால் அவருக்கு உலகமக்கள் அனைவரும் உறவாவர். உலக மக்கள் அனைவரின் உறவிருந்தால் தொண்டு செய்யக்கருதிய அவர், தொண்டு செய்யலாம். நன்மையும் அவரைத்தேடி வரும்.

# தொகுப்பு

## பண்புடையோரிடம் தோன்றாதவை

**கல்லாது போகிய நாளும், பெரியவர்கண்**
**செல்லாது வைகிய வைகலும், - ஒல்வ**
**கொடாது ஒழிந்த பகலும், உரைப்பில்**
**படாஅவாம் பண்புடையார் கண்.**

-நாலடியார்.
(பெரியாரைப் பிழையாமை-9)

*பொழிப்பு* :-

நற்பண்பு உடையாரிடத்தே கல்வியைக் கற்காது கழிந்த நாளும், பெரியோரிடம் சென்று பழகாது கழிந்த நாளும், தன்னால் கொடுக்க இயன்ற பொருளை எளியோர்களுக்குக் கொடுக்காமல் கழிந்த நாளும், ஆகிய இம்மூன்றும் உண்டாகா. எனவே, பண்புடையார் நாள் தோறும் கற்க வேண்டிய நூல்களைக் கற்றும், பெரியவர்களிடத்துச் சென்று பழகியும், எளியோர்க்குத் தன்னால் இயன்றதைக் கொடுத்தும் ஆகிய இவற்றிலேயே காலத்தைக் கழிப்பர் என்பதாயிற்று.

**நல்ல குலம்என்றும் தீய குலம்என்றும்**
**சொல்லளவு அல்லால் பொருள்இல்லை-தொல்சிறப்பின்**
**ஒண்பொருள் ஒன்றோ? தவம்கல்வி ஆள்வினை**
**என்று இவற்றால் ஆகும்குலம்.**

-நாலடியார்-
(தாளாண்மை-5)

*பொழிப்பு* :-

அந்தணர் முதலாக உள்ள பல குலங்களுள் இன்னது இன்னது நல்ல குலம் என்றும், இன்னது இன்னது தீய குலம் என்றும், இரண்டாகப் பகுத்துக் கொண்டு மநு முதலான சுருதிகள் கூறுவது வெறும் சொல்லளவே அன்றி, பகுத்தறிவிற்குப் பொருந்துமாறு இல்லை. அதனால் அவ்வாறு சொல்வதை விட்டுவிட்டு, உலகியல் முறையில் ஆராய்ந்து பார்த்தால் ஒருவருக்குக் குலச் சிறப்பை உண்டாக்குவது பொருள் ஒன்றே ஆகும். இதற்கு அடுத்தபடி தவம் இருந்தாலும் குலச்சிறப்பை உண்டாக்கும். கல்வி இருந்தாலும் குலச்சிறப்பை உண்டாக்கும். முயன்று செய்யும் நல்ல தொழில்கள் இருந்தாலும் குலச்சிறப்பை உண்டாக்கும்.

*அகலம்* :-

மநுமுதலான சுருதிகள், பிரம்மதேவனுடைய முகத்தில் பிராமணர் பிறந்தார் என்றும், இதனால் அவர் முதன்மையானவர் என்றும், தோளில் அரசர் பிறந்தார் என்றும், இதனால் அவர் இரண்டாம் தரத்தில் முதன்மையானவர் என்றும், தொடையில்

வணிகர் பிறந்தார் என்றும், இதனால் அவர் மூன்றாம் தரத்தில் முதன்மையானவர் என்றும், காலில் வேளாளர் பிறந்தார் என்றும், இதனால் அவர் நான்காம் தரத்தில் முதன்மையானவர் என்றும் கூறுகின்றன. இப்படிக் கூறுவது வெறும் சொல்லளவே. பகுத்தறிவால் ஆராய்ந்து பார்த்தால் இவ்வாறு கூறுவதில் உண்மைப் பொருள் இல்லை என்க. அதனாலே எந்த மக்கள் பொருள், தவம், கல்வி, ஆள்வினை என்னும் நான்கில் நான்கையும் எவர் பெற்றாரோ அவர் முதல்வர் என்க. மூன்று, இரண்டு, ஒன்றைப் பெற்றவர்கள் இரண்டாமவர், மூன்றாமவர், நான்காமவர் என்க. இந்த நான்கையும் தாளாண்மை உடையவரே பெறுவராதலின் இப்பாட்டு தாளாண்மை அதிகாரத்தில் வைக்கப்பட்டது.

**அகலம்:-**

ஆள்வினை - எடுத்துக்கொண்ட வினை. ஒன்றைச் செய்யும் திறம்.

தாளாண்மை - எடுத்துக்கொண்ட எல்லாவற்றிலும் முயற்சியுடையராய் இருத்தல்.

**நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும், தன்னை**
**நிலைகலக்கிக் கீழிடு வானும், - நிலையினும்**
**மேன்மேல் உயர்த்து நிறுப்பானும், தன்னைத்**
**தலையாகச் செய்வானும் தான்.**

-நாலடியார்-

(அறிவுடைமை- பாடல் - 8)

***பொழிப்பு :-***

நல்ல நிலைமைக்கண் தன்னை நிறுத்திக் கொள்கின்றவனும் தானே. தான் நிற்கவேண்டிய நன்னிலையைப் பிறழச் செய்து தன்னைக் கீழ்நிலைக்குக் கொண்டு போகின்றவனும் தானே. இந்த இரண்டும் ஒருபகுதி.

தான் நிற்கின்ற ஒரு தகுதியான நிலையைவிட மேலே உள்ள தகுதியான நிலைக்குத் தன்னைக் கொண்டுபோய் நிறுத்துபவனும் தானே. தன்னை எல்லா நிலைக்குமேல் உயர்த்தித் தலைமையாகச் செய்து கொள்கின்றவனும் தான்ஒருவனே ஆவன்.

*அகலம்* :-

அறிவுடையோர் மேலும் மேலும் உயர்ந்து கொண்டே போவர். அப்படிச் சென்று மிக்க உயர்நிலையில் வாழ்ந்திருப்பர். அதற்கு மாறுபாடாய் அறிவில்லாதவர் தாழ்ந்த நிலைக்கே தன்னைக் கொண்டுபோவார்.

மேற்கண்ட கருத்துக்கு ஒத்த பாடல் திருமந்திரம் எட்டாம் தந்திரத்துள் கேவலசகலசுத்தம் என்ற தலைப்பில் வந்துள்ளது. அப்பாடலைக் கீழே காண்போம்.

**'தானே தனக்குப் பகைவனும் நட்டானும்**
**தானே தனக்கு மறுமையும் இம்மையும்**
**தானே தான்செய்த வினைப்பயன் துய்ப்பானும்**
**தானே தனக்குத் தலைவனு மாமே.'** (2228)

உலக மக்கள் தன் கேட்டிற்குப் பிறரையே காரணமாகக் கூறுவர். அதனை மறுத்துத் தானே காரணம் என்பதை இப்பாட்டு கூறுகின்றது

**நுண்ணுணர்வு இன்மை வறுமை, அஃதுடைமை**
**பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம் - எண்ணுங்கால்**
**பெண்அவாய் ஆண்இழந்த பேடி அணியாளோ ?**
**கண்அவாத் தக்க கலம்.**

-நாலடியார்-
(அறிவின்மை - பாடல்-1)

*பொழிப்பு* :-

ஒருவன் பண்ணப்பணைத்தப் பெருஞ்செல்வத்தைப் பெற்றி ருந்தாலும் அதனால் அவன் பெருஞ்செல்வம் உடையவன் ஆகான். எதனால் எனின், நுண்ணுணர்வு என்னும் அறிவு அவனுடைய மனத்தில் இல்லாமையால் என்க.

ஒருவன் நுண்ணுணர்வு என்னும் அறிவை மனத்தில் பெற்றிருந்தால் அவன் பண்ணப்பணைத்தப் பெருஞ்செல்வத்தை உடையவன் போலக் கருதப்படுவான்.

ஆணாய் இருந்த ஒருவன் பெண்ணாக மாறிய பேடியாயினும் இயல்பாகவே பெண்ணான ஒருத்தி அணியக்கூடிய அணிகளை இப்பேடி பெற்றாலும் சிறப்பில்லாதவாறு போல் என்க.

எனவே, இயல்பான பெண்ணுக்கும், பேடியான பெண்ணுக்கும் வேறுபாட்டை அறிக. இயல்பான பெண்ணே பெண் என்றும் கூறப்படுவதற்குச் சிறப்புடையவள் ஆவள். அதனைப் போல ஒருவன் உள்ளத்தின்கண் இயல்பான நுண்ணுணர்வு என்னும் அறிவைப் பெற்றிருப்பதே எல்லாச் செல்வத்தைப் பெற்றார் போன்ற சிறப்பு என்க.

*அரும்பதம்* :-

பண்ணப்பணைத்த பெருஞ்செல்வம்-செயல் திறம் மிகுந்தபெரிய செல்வம்.

*குறிப்பு* :-

இப்பாடல் நன்னூலில் சொல்லதிகாரத்துள் ‘ஆண்மை விட்டு அல்லது அவாஉவ பெண்பால்’ என்னும் பகுதிக்கு மேற்கோளாக வந்துள்ளது.

இப்பாட்டின் கருத்தை

**‘அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவில்லார்**
**என்னுடைய ரேனும் இலர்’**

-திருக்குறள்- (அறிவுடைமை -10)

என்ற திருக்குறளால் அறியலாம்.

**‘ஓதியும் ஓதார் உணர்விலார்; ஓதாதும்**
**ஓதி அனையார் உணர்வுடையார்; -தூய்தாக**
**நல்கூர்ந்தும்செல்வர் இரவாதார், செல்வரும்**
**நல்கூர்ந்தார் ஈயார் எனின்’**

-நாலடியார்-
(நன்றியில் செல்வம் -10)

*பொழிப்பு* :-

அறிவில்லாதவர் கற்றிருந்தாலும் கல்லாதவரே. அறிவுடையவர் தாம் கல்லாமல் இருந்தாலும் கற்றவராகவே கருதப்படுவர்.

வறுமையுற்றோரும் ஒருவரிடத்தில் சென்று பிச்சை எடுக்காதவராய் இருந்தால் அவர் செல்வம் உடையவரே ஆவர்.செல்வம் உடையவரும் பிறர்க்கு உதவாராயின் வறுமையுற்றவரே ஆவர்.

***அகலம்*** :-

அறிவிலார் கற்றிருந்தாலும் கல்லாதவரே ஆவர் அறிவுடையோர் கல்லாதவராய் இருந்தாலும் கற்றவரே ஆவர்.

வறுமையுற்றோர் செல்வர் போல் விளங்குதலையும் செல்வமுடையவர் வறியராய் விளங்குதலையும் இப்பாட்டு கூறுகிறது.

**அத்திட்ட கூறை அரைச்சுற்றி வாழினும்**
**பத்தெட்டு உடைமை பலருள்ளம் பாடெய்தும்**
**ஒத்த குடிப்பிறந்தக் கண்ணும் என்று இல்லாதார்**
**செத்த பிணத்திற் கடை**

-நாலடியார்-
( இன்மை-1 )

***பொழிப்பு*** :-

தைத்த ஆடையைக் காலளவும் கட்டாது, முழங்கால் அளவே கட்டிக்கொள்கின்ற இயல்பை உடைய உடைச்சிறப்பு இல்லாதவரும், பத்து, எட்டு என்று எண்ணிக் கணக்கிடப்படும் செலாவணி நாணயத்தை உடையாராயின் அவர் பல மக்களுள்ளும் சிறப்பினை உடையவராய் இருப்பார்.

உயர்வுபொருந்தி இருக்கின்ற குடியில் ஒருவர் பிறந்தி ருந்தாலும் செலவாணி நாணயத்தில் ஒன்று கூட இல்லாராயின், அவர் இறந்த பிணத்தினும் தாழ்மையாகக் கருதப்படுவர்.

**அகலம்**:-

பண்டமாற்று, நாணயமாற்று என்று இரண்டு மாற்று உண்டு. பண்டமாற்று என்பது மிளகாய் என்ற ஒன்றைக் கொடுத்து அதற்குப் பதில் நெல் வாங்கிக் கொள்வது போன்றது.

நாணயமாற்று என்பது அரசர்கள் பொன்னாலும், வெள்ளியாலும் செம்பாலும் தங்கள் முத்திரையைப் பதித்து,

காசினை உண்டாக்கிக் கொள்வார்கள். இவற்றைக் கொடுத்து மாற்றிக் கொண்டால் நாணயமாற்று.

அக்காலத்தில் பொற்காசு, வெள்ளிக்காசு, செம்புக்காசு, செலவாணி நாணயமாக இருந்தன. இப்போது வெள்ளியும் அரசு முத்திரைப் பதித்த கடிதமும் செலவாணி நாணயமாக இருக்கிறது. செலவாணி நாணயம் தம்தம் காலத்தில் வழங்குகின்ற அரசர்களின் முத்திரைப் பதித்த காசுகள்.

**தாமேயும் இன்புறார் தக்கார்க்கும் நன்றாற்றார்**
**ஏமம்சார் நன்னெறியும் சேர்கிலார் - தாமயங்கி**
**ஆக்கத்துள் தூங்கி அவத்தமே வாழ்நாளைப்**
**போக்குவார் புல்லறி வினார்.** -நாலடியார்-

(புல்லறிவாண்மை பா-7)

***பொழிப்பு*** :-

அறிவு, நல்லறிவு என்றும், புல்லறிவு என்றும் இரண்டு வகைப்படும். நல்லவற்றை அறியும் அறிவெல்லாம் நல்லறிவு. நல்லது அல்லாதவற்றை அறியும் அறிவெல்லாம் புல்லறிவு என்க.

புல்லறிவை உடையவர் தாம் பெற்ற பொருளைக் கொண்டு, தாங்களும் இன்பத்தை அடையார். அதுவன்றித் தக்க பிறர்க்கும் கொடுத்து நன்மை செய்யார். அதுவன்றித் தமக்குப் பாது காவலான நல்ல வழியிலும் செல்வத்தைச் செலவிடார். செய்வது இன்னது என்று அறியாமல் மயக்கமுற்று இந்த செல்வத்தைத் தாமே வீணாக வைத்திருந்து பயன் இல்லாமல் காலத்தைக் கழிப்பர்.

***குறிப்பு*** :-

அபத்தம் என்கின்ற சொல் அவத்தம் என்று வந்தது.

**குலம்தவம் கல்வி குடிமைமூப்பு ஐந்தும்**
**விலங்காமல் எய்தியக் கண்ணும் - நலம்சார்ந்த**
**மையறு தொல்சீர் உலகம் அறியாமை**
**நெய்யிலாப் பால்சோற்றின் நேர்**

-நாலடியார்-

(பேதமை - பாடல்-3)

*பொழிப்பு :-*

குலமும், தவமும், கல்வியும், உயர்குடியில் பிறத்தலும், அறிவு முதிர்ந்தமையும் என்னும் இவ்வைந்தையும் ஒருவர் தவறாமல் பெற்ற இடத்தும், அவர் உலகத்தின் இயல்பை அறிந்து நடத்தல் என்னும் உலகியல் அறிவைப் பெறாமல் இருப்பவரே யானால் அது நெய்யை எடுத்துவிட்ட பால் சோற்றுக்குச் சமமாகும்.

*விளக்கவுரை :-*

நாலடியாரின் பழைய உரையாசிரியர் இப்பாட்டில் வந்துள்ள பால்சோறு என்பதைப் பால்கலந்து செய்த பாயாசமாயினும் அப் பாயாசத்தை உண்ணும் பொழுது நெய்யை அனுமானமாகக் கலந்து சேர்த்து சாப்பிட்டால் அது நல்ல சுவையாகவும் இருக்கும்; நல்ல குணத்தையும் தரும். அதனைப் போல ஒருவருக்கு குலமும் தவமும் கல்வியும் குடிப்பிறப்பும், முதிர்ந்த வயதின் அனுபவமும் என்னும் இவை இருந்தாலும் அவனிடம் உலகியல் அறிவும் சேர்ந்து இருக்குமேயானால் இவ்வைந்தும் நன்கு எடுத்துக்காட்டும் என்க. இது இல்லாவிடில் இந்த ஐந்தும் நன்கு சிறப்பாய் இராது.

**சக்கரச் செல்வம் பெறினும் விழுமியோர்**
**எக்காலும் சொல்லார் மிகுதிச்சொல் - எக்காலும்**
**முந்திரிமேல் காணி மிகுவதேல் கீழ்தன்னை**
**இந்திரனா எண்ணி விடும்.**

-நாலடியார்-
(கீழ்மை - பாடல்-6)

*பொழிப்பு :-*

மேன்மக்கள் சக்கரவர்த்தியாய் இருக்கும் பேரரசனுடைய செல்வத்தைப் போன்ற பெரிய செல்வத்தைப் பெற்றிருந்தாலும் மக்களிடத்தில் வரம்பு கடந்த வசையான சொற்களைச் சொல்ல மாட்டார். ஆனால் கீழ்மக்களோ முந்திரி என்னும் சிற்றெண் ணுக்கு மேலே காணி என்னும் எண்ணுக்குக்குரிய செல்வத்தைப் பெற்றுவிட்டால் அந்த செருக்கினாலே அவர் தன்னைப் பெரிய இந்திரனாக நினைத்துக் கொண்டு உலகமக்களைப் பழித்துப் பேசிக் கொண்டே இருப்பர்.

*அகலம்* :-

முந்திரி என்பது கீழ்வாய் இலக்கத்தில் உள்ள மிகச்சிறிய எண்ணாகும். ஒருபொருளை முந்நூற்று இருபது பாகம் செய்து அதில் ஒரு பாகத்திற்கு முந்திரி என்று பெயராகும்.

இந்த முந்திரி இரண்டு கொண்டது அரைக்காணி ஆகும். அரைக்காணி இரண்டு கொண்டது காணி ஆகும்.

மேல்மக்கள் மிகப் பெரிய செல்வத்தைப் பெற்றாலும் வரம்பு கடந்துப் பேசமாட்டார். கீழ்மக்களோ சின்ன செல்வத்தில் சிறிது உயர்ந்தாலும் செருக்குக் கொண்டு மக்களை இகழ்ந்து பேசிக் கொண்டே இருப்பர்.

*அரும்பதம்* :-

சக்கரம்- ஓர் பேரளவை.

**அறிவது அறிந்துஅடங்கி அஞ்சுவது அஞ்சி**
**உறுவது உலகுஉவப்பச் செய்து - பெறுவதனால்**
**இன்புற்று வாழும் இயல்பினார் எஞ்ஞான்றும்**
**துன்புற்று வாழ்தல் அரிது.**

-நாலடியார்-
(பொறையுடைமை - பாடல் - 4)

*பொழிப்பு* :-

அறியவேண்டிய நல்லதை அறிந்துகொண்டும், அடங்கியிருந்தும்; அஞ்சுவதற்குரிய பழிச்செயல்கள். பாவச் செயல்கள் ஆகிய இதற்கு அஞ்சி அவற்றைச் செய்யாமல் இருந்தும்; தனக்குக் கிடைத்த பொதுக் காரியத்தை உலகமக்கள் மகிழும்படி செய்தும்; தனக்குக் கிடைக்கும் ஊதியம் ஒன்றினாலே அது குறைவாக இருப்பினும் 'போதும்' என்ற மனத்துடன் இன்புற்று வாழ்தலும் ஆகிய இத்தன்மை உடையோர் இவ்வுலகில் எப்பொழுதும் துன்புற்று வாழ்தல் இல்லையாம்.

## மூன்று வகை மக்களின் காலம் கழிக்கும் முறை

**கல்லைக் கழிப்பர் தலையாயார்; நல்லவை**
**துவ்வாக் கழிப்பர் இடைகள்; கடைகள்**
**இனிதுண்ணேம் ஆரப் பெறேம்யாம் என்னும்**
**முனிவினால் கண்பாடு இலர்.**

-நாலடியார்-
(பன்னெறி - பாடல் - 6)

***பொழிப்பு :-***

தலையாய மக்கள் தங்கள் காலத்தை அறிவு நூல்களைக் கற்றலாகிய ஒன்றிலேயே செலவிடுவர். இடையாய மக்களோ உண்ணும் பொருள்களைத் தேடிப்பெற்று அதை உண்பதாகிய ஒன்றிலேயே காலத்தைச் செலவிடுவர். கடைமக்களோ யாகங்கள் இனிய பொருள்களைப் பெற்று உண்ணப்பெற்றிலேம் என்றும் அவ்வினிய பொருள் வேண்டும் அளவிற்குத் தனக்குக் கிடைக்கப் பெற்றிலேம் என்றும் ஆகிய இவற்றையே எண்ணி எண்ணித் தூங்காதவராய்க் காலத்தைச் செலவிடுவர்.

***அகலம்:-***

வினை முதல் வினை கொண்டதற்குக் ‘கல்லாக் கழிப்பர் தலையாயர்’ என்பதனை மயிலை நாதரும், சங்கர நமச்சிவாயரும் நன்நூலில் மேற்கோளாகக் காட்டுவர்.

**குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்**
**மிஞ்சி அழகும் அழகல்ல - நெஞ்சத்து**
**நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்**
**கல்வி அழகே அழகு.**

-நாலடியார்-
(கல்வி - பாடல் - 1)

***பாடபேதம் :-***

மஞ்சள் - மிஞ்சி

***பொழிப்பு*** :-

ஒருவர் தலையிடத்தே முடியை வளர்த்து, அழகுபடுத்திக் கொள்ளுதலும், இடையினிடத்தே வளைத்துக் கட்டும் சரிகைக் கரை அமைந்த உடையை அணிந்து கொள்ளுதலும். பாதத் தினிடத்தே '*மிஞ்சி*' என்னும் கால் மோதிரத்தை அணிந்து கொள்ளுதலும் ஆகிய உடம்பை அழகு படுத்திக் கொள்ளுதலும் இவை அழகினைத் தரா. அழகினைத் தருவது எது? எனின்; மனத்தினிடத்தேயாம். தீமையைக் கருதாமல் நல்லவற்றையே கருதும் நீதி உணர்வை உடையேம் என்னும் எண்ணத்தை உண்டாக்குகின்ற அறிவுடைக் கல்வியைப் பெறுதலே ஒருவர்க்கு உண்மையான அழகு உடைத்தாம். இக்கல்வி ஒழுக்கத்தைத் தரும் கல்வி என்க.

***அகலம்*** :-

புறமாகிய உடம்பை அழகுபடுத்திக் கொள்ளல் அழகு அல்ல. அகமாகிய மனத்தில் கல்வியை வைத்து அழகுபடுத்திக் கொள்ளலே அழகு ஆகும்.

**இரண்டாவது உரை**:-

'மஞ்சள் அழகு அழகல்ல' என்ற பழைய பாடத்தைக் கொண்டால் மஞ்சள் பூசிக் கொள்வது பெண்களுக்கே உரிய தாதலால் இப்பாட்டு பெண் கல்வியை வற்புறுத்தியதாகக் கொண்டு, பெண்கள் தலைமுடி வைத்துக் கொள்ளுதலும், சரிகைக்கரை அமைந்த சேலையைக் கட்டிக் கொள்ளுதலும், மஞ்சள் பூசி அழகு படுத்திக் கொள்ளுதலும் ஆகிய இவற்றைப் பெறுதல் அழகல்ல. அவர்கள் மனத்தினிடத்திலே கல்வி அழகைப் பெறுதலே அழகாகும்.

## *கல்விப் பயன்*

**கற்பக் கழிமடம் அஃகும் மடம்அஃகின்**
**புற்கந்தீர்ந்து இவ்வுலகில் கோளுணரும்கோள் உணர்ந்தால்**
**தத்துவ மான நெறிபடரும் அந்நெறி**
**இப்பால் உலகத்து இசைநிறீஇ உப்பால்**
**உயர்ந்த உலகம் புகும்.**

-நான்மணிக்கடிகை -29.

*பொழிப்பு :-*

ஒருவன் கல்வியைக் கற்பானேயானால் கற்றலின் பயனாய் அவனிடத்துள்ள மிகுதியான அறியாமை குறையத் தொடங்கி விடும். அறியாமை குறையத் தொடங்கின் புல்லறிவு தீர்ந்து உலகத்திலுள்ள நல்ல கொள்கைகளை எல்லாம் அறிந்து கொள்வான். அவற்றை அறிவானேயானால் அறிந்து கொண்ட பொருள்களுள் சிறந்த மெய்ப்பொருளாகிய தத்துவஞான உணர்ச்சியைப் பெறுவான். மெய்ப்பொருள் உணர்வாகிய தத்துவ ஞான உணர்ச்சியைப் பெற்றானேயானால், பெற்ற அந்நெறியால் இப்பால் உலகம் எனும் இம்மை உலகத்தில் புகழை நிலை நிறுத்துவான். பின்னர் உப்பால் எனும் மறுமை உலகத்தில் உயர்வான வீட்டு உலகத்தின்கண் புகுவான்.

*அகலம் :-*

'இப்பால் உலகத்து இசைநிறீஇ' என்பது சீவன் முத்தி நிலை ஆகும்.

'உப்பால் உயர்ந்த உலகம்' புகும் என்பது விதேக முத்திநிலை ஆகும்.

புற்கம்-புல்லறிவு.

## சிறப்புடைய நான்கு

**கண்ணில் சிறந்த உறுப்பில்லை; கொண்டானில்**
**துன்னிய கேளிர் பிறரில்லை மக்களின்**
**ஒண்மையவாய்ச் சான்ற பொருளில்லை ஈன்றாளோடு**
**எண்ணக் கடவுளும் இல்.**

- நான்மணிக்கடிகை-

*பொழிப்பு :-*

உடம்பிலே உள்ள பல உறுப்புக்களுள் விழியைக் காட்டிலும் ஒருவர்க்கு சிறந்த உறுப்பு இல்லை என்க. ஒரு பெண்ணிற்குத் தன்னைமணந்து கொண்ட கணவனைக் காட்டிலும் சிறந்த உறவினர் இல்லை என்க. ஒருவர்க்குத் தம்முடைய புதல்வர்களைக் காட்டிலும் சிறந்த பொருளில்லை என்க. தன்னை ஈன்ற தாயுடன் ஒப்பிட்டுக் கூறும் எந்த வகையான கடவுளும் இல்லை என்க.

*எடுத்துக்காட்டு* :-

தம்மக்களே தமக்குச் சிறந்த பொருளாதலைத் 'தம்பொருள் என்ப தம்மக்கள்' என்னும் திருக்குறளால் அறிக.

தாய் தெய்வத்தினும் சிறந்ததைத் 'தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை' என்ற கொன்றை வேந்தனால் உணர்க.

## *கல்விச் சிறப்பு*

**திரிஅழல் காணின் தொழுப விறகின்**
**எரிஅழல் காணின் இகழ்ப ஒருகுடியில்**
**கல்லாது மூத்தானைக் கைவிட்டுக் கற்றான்**
**இளமைபா ராட்டும் உலகு.**

-நான்மணிக்கடிகை- 65.

பொழிப்பு:-

விளக்கின்கண் உள்ள திரியில் சுடர்ஒளியைக் காணில் மக்கள் எல்லாம் இவ்வழல் நமக்குப் பொருள்களை விளக்கிக் காட்டுகின்ற அழல் சுடராகும். அதனாலே இது தெய்வத்தைப் போல் கருதி வணங்கத் தக்கது என்று கருதி அதனை வணங்கு வராம். இவ்வழல் அறிவிக்க உதவுதலால் ஞானஅழல் என்க.

அதே அழல் சோற்றினைச் சமைக்க உதவும் விறகி னிடத்துக் காணப்படுமாயின் இது சாதாரணமான கர்மஅழல் என்று கருதி இதனை ஒருவரும் வணங்கார் என்க. இதனைப்போல ஒரு குடும்பத்தில் கல்லாத மூத்தவர் இருப்பின் இவன் வெறும் தொழில் செய்வதற்கே உரியவன் என்று கருதி அவனைப் பாராட்டாமல், அவன் தம்பி ஒருவன் சற்று அறிவில் சிறந்தவனாக இருந்தால் இவன் தொழில் செய்வதற்கு மட்டும் உரியவன் அன்றி உலக மக்களுக்கு நன்மை, தீமைகளை அறிந்து சொல்லும் அறிவுடையவன் என்று கருதி அவனைத் தெய்வம்போல் மதித்துப் போற்றுவர்.

## நான்கு குற்றங்கள்

**இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்**
**வளமிலாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம்**
**கிளைஞரில் போழ்தில் சினம்குற்றம் குற்றம்**
**தமர்அல்லார் கையகத்து ஊண்.**

-நான்மணிக்கடிகை -பா-93.

*பொழிப்பு* :-

பெறுவதற்கரிய இளமைப்பருவத்திலே கல்வியை நன்கு கற்காமல் வீணாகக் காலம்கழிப்பது பெரிய குற்றமாகும். தன்னிடத்தில் செல்வம் இல்லாத போது பிறர்க்குக் கொடுக்கும் தொழிலை மேற்கொள்வது குற்றமாகும். தனக்கு உதவிசெய்யும் உறவினர் தன்னோடு இல்லாதபோது பிறரிடம் கோபங்கொண்டு சண்டைக்கு போதல் குற்றம் ஆகும். தம்மவராய் இல்லாத பகைவரிடத்தே உணவை ஏற்று உண்பதும் குற்றமாகும்.

## இன்னாமை நான்கு

**ஏமமில் மூதூர் இருத்தல் மிகஇன்னா**
**தீமை உடையார் அயல்இருத்தல் நன்குஇன்னா**
**காம முதிரின் உயிர்க்குஇன்னா ஆங்குஇன்னா**
**யாம் என்பவரோடு நட்பு.**

(-இன்னா நாற்பது-பா-25)

*பொழிப்பு* :-

பழமை வாய்ந்திருந்தாலும் தமக்கும் தம் பொருளுக்கும் பாதுகாவல் இல்லாத ஊரின்கண் செய்தலையே தொழிலாகக் கொண்ட ஒருவர் தம் வீட்டுப் பக்கத்தில் குடியிருக்க வாழ்தல் மிகவும் துன்பமாகும். காமம் என்கின்ற குணம் அளவோடு இல்லாமல் பெருந்திணைக் காமமாய் மிகுந்து தோன்றினால் அது தம் உயிர்க்கே துன்பம் விளைவிப்பது ஆகும். அதனைப்போலவே '*நாமே*' தலைமையுடையோம் பிறர் எல்லாம் தமக்குக் கீழானவர் என்று கருதும் உள்ளச்செருக்கு மிக உடையவரிடத்தே நட்பு கொள்ளுதல் துன்பத்தையே தருவதாகும்.

*அகலம் :-*

'செருக்கு' இரண்டு வகையாகும். அவை 'யாம்' என்ற செருக்கு 'எனது' என்ற செருக்கு ஆகும். இப்பாடலில் கூறியது 'யாம்' என்ற செருக்காகும்.

செருக்கு என்ற சொல்லுக்கு 'மயக்கம்' என்பது பொருள்படும்.

## *ஒழுக்கத்திற்கு முதலாய் இருப்பவை*

**நன்றி அறிதல், பொறையுடைமை, இன்சொல்லோடு**
**இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை கல்வியோடு**
**ஒப்புரவு ஆற்ற அறிதல், அறிவுடைமை,**
**நல்லினத் தாரோடு நட்டல் இவைஎட்டும்**
**சொல்லிய ஆசார வித்து.**

(ஆசாரக்கோவை-1)

*பொழிப்பு :-*

ஆசாரம் என்ற ஒழுக்கத்திற்கு விதை என்னும் காரணமாய் இருப்பவை எட்டாகும். அவை 1 பிறர் செய்த நன்மையை மறவாதிருத்தலும், 2. பொறாமையைப் பெறாமல் பொறுமை உடையவராய் இருத்தலும், 3. தீய சொற்களைக் கூறாமல் இன்பந்தரும் இனிய சொற்களைக் கூறுதலும் 4. எந்தவொரு உயிரினத்திற்கும் தீங்கு செய்யாதிருத்தலும் (ஜீவகாருண்யம்) 5. கல்லாதிருத்தலை விட்டுக் கல்வி அறிவுடையவராக இருத்தலும் 6. உலகநடையை அறிந்து (உலகியல்) ஒழுகுதலும் 7.அறிவினை செல்வமாகப் பெற்றிருத்தலும், 8.புல்லினத்தாரோடு நட்புக் கொள்ளாமல் நல்லினத்தாரோடு நட்பு கொள்ளுதலும் ஆகிய இவை ஆகும்.

## *ஒழுக்கத்திற்குப் பயன்*

**பிறப்பு நெடுவாழ்க்கை, செல்வம்,வனப்பு,**
**நிலக்கிழமை, நீக்கூற்றநம் கல்வி, நோயின்மை**
**இலக்கணத்தால் இவ்வெட்டும் எய்துப என்றும்**
**ஒழுக்கம் பிழையா தவர்** (ஆசாரக் கோவை - 8)

*பொழிப்பு* :-

உயர் சாதியாகக் கருதப்படும் பிறப்பும், நீண்ட ஆயுளுடன் வாழ்தலும், செல்வப்பேறும், அழகும், நிலத்திற்கு உரிமைப் பெறுதலும், புகழைப் பெறுதலும், கல்வியை உடையராதலும், பிணி இல்லாதிருத்தலும், (ஆரோக்கியம்), இவற்றை ஒழுக்கமுடையோர் நன்றாகப் பெறுவர்.

## வாழும் முறை

**தான் பிறந்த இல்நினைந்து தன்னைக் கடைப்பிடித்துத்**
**தான்பிறரால் கருதற்பா டுணர்ந்து - தான்பிறரால்**
**சாவ எனவாழான் சான்றோரால் பல்யாண்டும்**
**வாழ்க எனவாழ்தல் நன்று.**

-சிறுபஞ்சமூலம் - பாடல் 68.

*பொழிப்பு* :-

ஒருவன் முதலில் தான்தோன்றிய வீட்டின் நிலை வறுமையில் உள்ளதா? செல்வத்தில் உள்ளதா? என்பதையும் துன்பத்தில் உள்ளதா? இன்பத்தில் உள்ளதா என்பதையும் நன்கு அறிந்து கொள்ளவேண்டும். அதன்பின் தன்குடும்பம் வறுமையிலும், துன்பத்திலும் இருப்பதாக அறிந்தால் அவற்றைக் களைவதற்கு என்னவென்ன செயல்கள் செய்யவேண்டும் என்பதை அறிந்து அச்செயல்களை நன்குகடைப்பிடித்துச் செய்யவேண்டும். பின்னர் உலக மக்களாலே தான் நல்லவன் என்றோ, தீயவன் என்றோ எவ்வாறு கருதப்படுகின்றோம் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். மேலும் தான் பிறமக்களாலும், சான்றோர்களாலும் தான் செய்யும் நல்ல காரியங்களைக் கருதி இத்தகையோன் இறந்துவிடாமல் நீண்டநாள் வாழவேண்டும் எனக் கருதும்படி எல்லோருக்கும் பயனுள்ளவனாய் இருக்க வேண்டும்.

## *பழங்காலத்துக் கல்வி வளர்ச்சி*

**ஊணொடு கூறை எழுத்தாணி புத்தகம்**
**பேணொடு எண்ணும் எழுத்துஇவை மாணொடு**
**கேட்டு எழுதி ஓதிவாழ்வார்க்கு ஈய்ந்தார் இம்மையால்**
**வேட்டுஎழுத வாழ்வார் விரிந்து.**

(ஏலாதி-93)

***பொழிப்பு*** :-

ஆசிரியரிடம் பாடம் கேட்டும், பாடம் கேட்டதை எழுதியும், எழுதியதை ஓதியும் வருகின்ற மாணவர்க்கு உணவும், ஆடையும், எழுதுதற்கு எழுத்தாணியும், எழுதுதற்குப் பயன்படும் ஓலைக்கட்டு என்னும் புத்தகமும், பாதுகாக்கப்படும் கணக்கு நூல்களும் எழுத்து என்னும் ஏனைய இலக்கியமும் ஆகிய இவற்றைக் கொடுத்து உபகாரம் செய்தவர் இந்த உலகத்தில் பலராலும் விரும்பப்பட்டு அவர்களுடைய புகழ் பாடல்களால் எழுதப்பட்டு விரிவடைந்து வாழ்வார்.

***குறிப்பு*** :-

பழைய காலத்தில் மக்கள் பனை ஓலையிலேயே எழுதி யிருந்தனர். தக்க பனைஓலையை தேர்ந்தெடுத்து அதனை வாரி அளவாக நறுக்கித் துளையிட்டு சேர்த்துக் கட்டிய அதற்குப் புத்தகம் அல்லது பொத்தகம் என்று பெயர்.

***இரண்டாவது உரை*** :-

மேலே கேட்டல், எழுதுதல், ஓதுதல் என்னும் மூன்றையும் உடையவர் மாணவரே ஆவர் என்ற கருத்தில் உரைஎழுதியுள்ளேன். இவ்வாறுஅன்றி பாடம் கேட்கின்ற மாணவர்கட்கும், அவர்களுக்கு நூல்களை எழுதிக்கொடுக்கும் அறிஞர்களுக்கும், மாணவர் களுக்குப் பாடம்சொல்லும் பேராசிரியர்களுக்கும் என்னும் மூவர்க்கும் உணவு முதலானவற்றைக் கொடுத்தவர் சிறந்து வாழ்வார்.

அச்சு இயந்திரம் இல்லாத அந்தக்காலத்தில் நூல்களை எழுதி மாணவர்களுக்குப் பாடம் சொல்லும்பேராசிரியர்களுக்கும் கொடுத்து உதவுகின்ற பழக்கம் இருந்தது. அவர்கள் ***எழுதும்***

***கணக்காயர்*** என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் எந்த விதமான இலக்கியங்களையும் பனைஓலையில் அழகாக நல்ல முறையில் எழுதி மையிட்டுக் கொடுத்து வந்தனர். இவர்கள் உதவியினாலேயே பல இலக்கியங்கள் உயிரோடு வாழ்ந்திருக்கின்றன.

## அறியாமையால் வரும் கேடு

**கல்லார்க்கு இனனாய் ஒழுகலும் காழ்கொண்ட**
**இல்லாளைக் கோலால் புடைத்தலும் - இல்லம்**
**சிறியாரைக் கொண்டு புகலும்இம் மூன்றும்**
**அறியாமை யான்வரும் கேடு.**

(திரிகடுகம்-3.)

***பொழிப்பு*** :-

படிக்காதவர்களுக்குக் கூட்டாளியாய்ப் படிக்காமல் இருத்தலும்; மனவெறுப்புக் கொண்ட தன் மனைவியை அன்புச் சொல்லால் திருத்த முயலாமல் கோல்கொண்டு அடித்துத் திருத்த முயலுதலும், நற்பண்பே இல்லாத சிறியவரை உடன் அழைத்துக் கொண்டு அவருடன் தன்வீட்டில் புகுதலும் ஆகிய இம்மூன்றும் அறியாமையை அடியாகக் கொண்டு கெடுதி பயக்கும் செயல்களாகும் என்க.

## *மிகக் கற்றவர்க்கு எந்நாளும் தன்நாடே ஆகும்*

**ஆற்றவும் கற்றார் அறிவுடையார், அஃதுடையார்**
**நாற்றிசையும் செல்லாத நாடில்லை, அந்நாடு**
**வேற்றுநாடு ஆகா தமவேயாம் ஆயினால்**
**ஆற்றுணா வேண்டுவது இல்.**

-பழமொழி (கல்வி-பாடல்-4)

***பொழிப்பு*** :-

கல்வியை முறைப்படி மிகுதியாகக் கற்றவரே அறிவுடையோராவர். அத்தகைய கல்வியை உடையோருக்கு நான்கு திசைக்கண் உள்ள நாடுகள் எவற்றின் கண்ணும் செல்வாக்கு

இல்லாத நாடே இல்லையாகும். இந்நாடு தமக்கு வேற்று நாடாக அமையாது. தமக்குரிய நாடாகவே இருக்கும். அக்காரணத் தினாலே அவர் எந்நாட்டிற்குச் சென்றாலும் வழியில் உண்ணும் உணவென்னும் கட்டுச்சோற்றைக் கொண்டுபோக வேண்டு வதில்லையாகும்.

*கருத்து* :-

நன்கு கற்றோரை உலக மக்கள் வரவேற்று நன்கு உணவு முதலானவை கொடுத்து உபசரிப்பார் ஆதலின் இவர் தமது வீட்டிலிருந்து உணவு எடுத்துக்கொண்டு போகவேண்டு வதில்லையாம்.

*அரும்பதம்* :-

ஆற்றவும் கற்றார் - முறைப்படி கல்வியை மிகுதியாகப் படித்தவர்

ஆற்றுணா - வழியில் உண்ணும் உணவு

ஆறு - வழி

## *கற்றறிந்தார் கண்ட அடக்கம்*

**கற்றறிந்தார் கண்ட அடக்கம் அறியாதார்**
**பொச்சாந்து தம்மைப் புகழ்ந்துரைப்பார் - தெற்ற**
**அறைகல் அருவி அணிமலை நாட!**
**நிறைகுடம் நீர்தளும்பல் இல்.**

-பழமொழி-
(கல்வி பாடல்-9)

*பொழிப்பு* :-

பாறாங்கற்களில் அலைத்துக்கொண்டு அருவி ஒழுகும் வளப்பத்தை உடைய அழகிய மலைநாடனே! நூல்களைக்கற்கும் முறைகளில் கற்று அதில் அறிய வேண்டுவனவற்றை அறிந்து விளங்கும் சான்றோர், தாம் ஆராய்ந்தவற்றுள் அடக்கமே சிறந்த தென்று அறிந்து அடங்கியிருப்பர். அடக்கத்தின் பெருமையை அறியாத அறிவில்லாத மக்கள் அடக்கத்தையே மறந்து விட்டு தம்மைத்தாமே மிகவும் உயர்த்திப் புகழ்ந்து பேசிக்கொண்டே இருப்பர்.

இச்செயல் எது போன்றது எனில் தண்ணீர் நிறைந்த குடம் தளும்புவது இல்லை; தண்ணீர் குறைந்த குடம் தளும்பும் என்னும் பழமொழியை உணர்த்துவதாகும்.

*கருத்து* :-

கல்வி நிறைந்தவர் தம்மைத் தாமே புகழ்ந்து கொள்ளமாட்டார். கல்வி அறிவில்லாதவரே தம்மைத்தாமே புகழ்ந்து கொள்வார்.

தற்புகழ்ச்சி ஒரு குற்றமாகும்.

## அறிவின் சிறப்பே முதற்சிறப்பு

**அறிவினால் மாட்சியொன் றில்லா ஒருவன்**
**பிறிதினால் மாண்டது எவனாம்? பொறியின்**
**மணிபொன்னும் சாந்தமும் மாலையும் சின்ன**
**அணியெல்லாம் ஆடையின் பின்.**

-பழமொழி-

(அறிவுடைமை -பாடல் -1)

*பொழிப்பு* :-

கல்பதித்த நகை அணியும், பொன்னால் செய்த நகைஅணியும், பூசி அழகுபடுத்திக்கொள்ளும் சந்தனக்குழம்பு முதலான அணியும் அணிந்து அழகுபடுத்திக் கொள்ளும் மாலை என்னும் அணியும் ஆகிய இவைஎல்லாம் உடுத்தி அழகு படுத்திக்கொள்ளும் 'உடை' என்னும் அணிக்கு ஒப்பாகா. பின்னாகவே கருதப்படும். அதுபோல ஒருவனுக்கு செல்வம், நிலம் முதலான பொருள்களால் மாட்சிமை என்னும் பெருமை உண்டாயினும் அறிவினால் உண்டாகும் மாட்சிமையாகிய பெருமைக்கு ஒப்பாகா. பின்னாகவே கருதப்படும்.

அணிகளுள் 'ஆடை' எவ்வாறு முதன்மையோ அதைப்போல செல்வம் முதலானவற்றால் ஏற்படும் பெருமையைக் காட்டிலும் அறிவினால் உண்டாகும் பெருமையே முதன்மையானது.

*அகலம் :-*

உவமை என்கின்ற ஒன்று அணியாகவும் வரும். அன்றி பொருளையும் உணர்த்தி நிற்கும். இங்கு வந்த உவமை பொருள் உணர்த்தும் உவமை என்க. இதனை

'உவமப் பொருளின் உற்றது உணரும்
தெளிமருங்கு உளவே திறத்தியல் ஆன'

-தொல்.பொருள்.அகம் -

என்ற தொல்காப்பிய நூற்பாவால் அறிக.

## *மேன்மக்கள் மாண்பு*

**தெற்றப் பகைவர் இடர்ப்பாடு கண்டக்கால்
மற்றும்கண் ணோடுவர் மேன்மக்கள் - தெற்ற
நவைக்கப் படும்தன்மைத் தாயினும் சான்றோர்
அவைப்படின் சாவாது பாம்பு.**

பழமொழி
(சான்றோர் செய்கை-6)

*பொழிப்பு :-*

மேன்மக்களானவர் தன்னோடு எப்பொழுதும் மாறுபட்டே யிருக்கும் பகைவர்க்குத் துன்பம் தோன்றுமேயானால் அப்பொழுது தம்மாறுபட்ட எண்ணத்தை நீக்கிக்கொண்டு கண்ணோட்டம் உடையவராய் இரக்கங்காட்டி அப்பகைவர்க்கு நன்மையே செய்வர். மாறுபட்டு கண்டால் தண்டிக்கத்தக்க கொடுந்தன்மையைப் பெற்றிருந்தாலும் பாம்பு சான்றோர் முன்னிலை அடைந்தால் உயிர் பிழைத்தே செல்லும்.

*அரும்பதம் :-*

தெற்ற - மாறுபட்ட
கண்ணோடுதல் - இரக்கங்காட்டுதல்
நவைக்கப்புடும் தன்மைத்து ஆயினும் - கொல்லப்படும் தன்மையைப் பெற்றிருந்தாலும்.

## கீழ்மக்கள் இயல்பு

**பூத்தாலும் காயா மரமுள; மூத்தாலும்
நன்கறியார் தாமும் நனியுளர், பாத்தி
விரைத்தாலும் நாறாத வித்துள; பேதைக்கு
உரைத்தாலும் தோன்றாது உணர்வு.**

-பழமொழி-
(கீழ்மக்கள் இயல்பு பாடல்-4)

*பொழிப்பு* :-

சில மரங்கள் காய்ப்பதற்கு அறிகுறியாய்ப் பூத்தாலும் காய்ப்பதில்லையாம். அதனைப்போல மக்களுள் பலர் அறிவு முதிர்ச்சிக்கு ஏதுவாய் மூப்படைந்தாலும் நன்கு அறியும் அறிவைப் பெறாதவர் மிகுதியாக உள்ளனர்.

பாத்தி அமைத்துப் பண்படுத்தி விதையை விதைத்தாலும் முளைக்காமல் போகும் விதைகளும் உள்ளன. அதனைப்போல அறிவில்லாதவருக்கு அறிவு கொளுத்தி அறிவுரைகளைக் கூறினாலும் அவனுக்கு அறிவு தோன்றுவதில்லையாம்.

*உதாரணப்பாடல்* :-

**பூத்தாலும் காயா மரமுள நன்றறியார்
மூத்தாலும் மூவார்நூல் தேற்றாதார் பாத்திப்
புதைத்தாலும் நாறாத வித்துள பேதைக்கு
உரைத்தாலும் செல்லாது உணர்வு.**

(சிறுபஞ்ச மூலம்- 23)

## தலையான மக்களின் சிறப்பு

**பூவாது காய்க்கும் மரமுள நன்றறிவார்
மூவாது மூத்தவர் நூல்வல்லார் - தாவா
விதையாமை நாறுவ வித்துள மேதைக்கு
உரையாமை செல்லும் உணர்வு.**

(சிறுபஞ்சமூலம் -22)

**பொழிப்பு:-**

மரங்களெல்லாம் பெரும்பாலும் பூத்தே காய்க்கும். சில மரங்கள் பூவாமலே காய்ப்பதும் உண்டு. அதனைப்போல மக்களுள் பலர் இன்னதுசெய் என்று சொன்னால் அதை ஏற்றுக்கொண்டு அதனைச் செய்வார்கள். சிலர் பிறர் சொல்வதற்கு முன்னரே அறிவினால் அறிந்து தாங்களாகவே அச்செயலைச் செய்து முடிப்பார்கள். இவரை அறிஞர் ஏவா மக்கள் என்பர்.

ஔவையும் '*ஏவா மக்கள் மூவா மருந்து*' என்பர்.

***அகலம்:-***

## மக்கள் மூன்று வகையினர்

***முதல்தரத்தினர்:-***

பிறர் சொல்லாமலேயே தாமே அறிந்து செயல்படுவர். இவரை ஏவா மக்கள் என்பர். பூவாது காய்க்கும் மரத்துக்கு ஒப்பாவர். இவர் தலையாயவர்.

***இரண்டாம் தரத்தினர்:-***

அறிஞர் இன்னது செய்க எனக்கூறினால் சொன்னபடியே செய்து முடிப்பர். இவர் பூத்துக் காய்க்கும் மரத்துக்கு ஒப்பாவர்

***மூன்றாம் தரத்தினர்:-***

அறிவறிந்து எவ்வளவு தூரம் சொன்னாலும் செய்கின்ற செயலை செவ்வையாக செய்யாதவர். இவர் பூத்தாலும் காயாத மரமாவர்.

## *அறிவில்லாத மக்களின் செயல்*

**பொல்லாத சொல்லி மறைந்தொழுகும் பேதைதன்**
**சொல்லாலே தன்னைத் துயர்படுக்கும் - நல்லாய்**
**மணலுள் முழ்கி மறைந்து கிடக்கும்**
**நுணலுந்தன் வாயால் கெடும்.**

-பழமொழி-
(கீழ்மக்கள்செய்கை - பாடல் - 8)

*பொழிப்பு :-*

நல்லபெண்ணே! பொல்லாதவற்றைச் சொல்லியும், பொல்லாதவற்றைச் செய்தும், அக்குற்றத்தின் காரணமாக பலர் கண்களில் அகப்படாமல் மறைந்து திரியும் அறிவில்லாத ஒருவன் தான் மறைந்து கொண்டிருக்கும் இடத்திலேயே அங்கு உறைவாரோடு தன் குற்றங்களைச் சொல்லி தன்னைத்தானே அறிவித்துவிடுவான். அது எதுபோல் எனில், பாம்புக்கு அகப் படாமல் மணலுக்குள் மறைந்து வாழும் தவளையும் வெளிப்பட்ட காலத்தில் தன்வாயால் செய்யும் ஓசையால் தன்னைத்தானே பாம்புக்குக் காட்டிக்கொடுத்து தான்கெடும் என்பதை அறிவாயாக.

## *மொழியின் தோற்றம்*

**மாரியும் கோடையும் வார்பனி தூங்கநின்று**
**ஏரியும் நின்றங்கு இளைக்கின்ற காலத்து**
**ஆரியமும் தமிழும் உடனே சொல்லிக்**
**காரிகை யார்க்குக் கருணைசெய் தானே.**

(-திருமந்திரம்- பாடல் -65)

*பொழிப்பு :-*

மழைக்காலம் என்றும் கோடை என்னும் வெயிற் காலம் என்றும் மிகுதியான பனிமிகுந்த எழுச்சியான அச்சிரசிசிரகாலம் என்றும் ஒருயாண்டு மூன்று விதமாகப் பிரிக்கப்பட்டு, ஒரு நாளானது பகல் ஏறி, இரவுஇளைத்தும், இரவு ஏறி பகல் இளைத் தும் நடைபெறுகின்ற காலநிகழ்ச்சியில் (இறைவன்) வட மொழியாகிய ஆரியத்தையும், தென்மொழியாகிய தமிழையும் ஒருசேரத் தன் சக்தியெனும் காரிகையாகிய உமாதேவியாருக்கு அருள்செய்தான். பின்னர் உமாதேவியார் உலக மக்களுக்கு அருள் செய்தார்.

*அகலம் :-*

இறைவவன் உமாதேவியாருக்கு அருளிய ஆரியமொழியும், தமிழ்மொழியும் உமாதேவியாரால் மக்களுக்குக் கூறப்பட்டு உலகில் அம்மொழிகள் வழங்களாயின.

ஒவ்வொரு மொழியும் மக்களாலே தோன்றின என்பது மொழி நூலார் கருத்து. ஆனால் திருமூலர் இறைவனால் மொழிகள் தோன்றின என்று கருதுகின்றார்.

காரிகை - அழகு

காரிகை என்பது அழகுடைய உமாதேவியாரைக் குறிப்பதாகும்.

## *இளமை நிலையாமை*

**கிழக்கெழுந்து ஓடிய ஞாயிறு மேற்கே**
**விழக்கண்டும், தேறார் விழியிலா மாந்தர்**
**குழக்கன்று மூத்துஎரு தாய்ச்சில நாளில்**
**விழக்கண்டும் தேறார் வியனுல கோரே.**

-திருமந்திரம் - 177 -

***பொழிப்பு*** :-

ஞாயிறு நல்லொளியுடன் கிழக்கே தோன்றி ஓடி மேற்குத் திசையில் சென்று தன்ஒளியை இழந்து மறைந்து போதலை நாள்தோறும் வானத்தில் கண்டும் அறிவாகிய விழி இல்லாத மக்கள் இளமையோடு பிறந்த தாங்கள் காலநிகழ்ச்சியில் இளமைக் கெட்டு அழிந்துவிடுவோம் என்பதைனை அறியாமல் உள்ளனர். இது வானத்தில் நிகழும் நிகழ்ச்சி. இதனைப் போலவே உலக மக்கள். இந்நில உலகில் இளமையோடு பிறந்த கன்றுக்குட்டி ஒன்று காலமாறுதலில் முதிர்ந்து கிழஎருதாகி அழிந்து போதலைப் பார்த்தும் இளமை முதலானவை அழிந்துபோதலைத் தெளியாத வராய் உள்ளனர்.

***அகலம்*** :-

இளமை நிலையாமைக்கு வானத்தில் நடக்கும் நிகழ்ச்சி ஒன்றினையும் நிலஉலகில் நடக்கின்ற நிகழ்ச்சி ஒன்றினையும் திருமூலர் எடுத்துக் காட்டுகின்றார்.

## கொடிய ஐந்து பாவங்கள்

**கொலையே களவுகள் காமம் பொய்கூறல்**
**மலைவான பாதகமாம் அவை நீக்கித்**
**தலையாம் சிவனடி சார்ந்துஇன்பம் சார்ந்தோர்க்கு**
**நிலையாம் இவைஞானானந் தத்திருத்தலே.**

- (திருமந்திரம் - 200) -

***பொழிப்பு*** :-

கொலையே, களவே, கள்ளே, காமமே, பொய்கூறலே என்னும் இவ்வைந்தும் மாறுபட்ட ஐந்து பெரும் பாதகங்களாகும். அவைகளை நீக்கிவிட்டு தலைமையான சிவபெருமானுடைய திருவடியைப் பற்றுக்கோடாகப் பெற்றவர்க்கு ‘சத்தியம்’ என்கின்ற தத்பதப் பொருளும்; ‘ஞானம்’ என்கின்ற துவம்பதப் பொருளும் ‘அனந்த ஆனந்தம்’ என்கின்ற அசிபதப்பொருளும் ஆகிய இவை நிலையானதாகும் என்க.

***பாடபேதம்*** :-

‘இலையாம்’ என்றபாடம் பிழையான பாடம். ‘நிலையாம்’ என்பதே சரியான பாடம்.

***அகலம்*** :-

இன்பம் சார்ந்தோர்க்கு மகாவாக்கியப் பொருளாகிய சத்தியம், ஞானம், அனந்தம், ஆனந்தம் என்னும் அவை நிலையாகும் என்று கொள்க.

கொலை, களவு, கள், காமம், பொய்கூறல் இவற்றைப் ‘பஞ்சமாபாதகம்’ என அறிஞர் கூறுவர்.

பிங்கலநிகண்டு ‘காமம்’ என்ற ஒன்றை நீக்கிவிட்டு ‘குருதுரோகம்’ என்பதைச் சேர்த்துக்கொண்டு பஞ்சமாபாதகம் என்கிறது.

‘கொலையே களவுகள்குரு நிந்தை
பகரும் பொய்யுடன் பஞ்சபா தகமே’

-பிங்கல நிகண்டு- **68.**

## *பிறன் மனை விழையாமை*

**ஆத்த மனையாள் அகத்தில் இருக்கவே**
**காத்த மனையாளைக் காமுறும் காளையர்**
**காய்ச்ச பலாவின் கனியுண்ண மாட்டாமல்**
**ஈச்சம் பழத்துக்கு இடர்உற்ற வாறே.**

-(திருமந்திரம்- பா-20.

*பொழிப்பு* :-

தனக்கு உண்மையாக நடந்துகொள்ளக்கூடிய மனைவி தன் வீட்டிலே இருக்க, பிறர் தங்களுக்கு உரிமையாக் கொண்டு பாதுகாத்து வைத்திருக்கும் உண்மை இல்லாத மனையாளை விரும்புதல் எத்தகையதெனில், தன் வீட்டுத்தோட்டத்தில் பழுத்திருக்கும் பலாப் பழத்தினை உண்ண விரும்பாமல், பிறருடைய இடங்களில் உள்ள முள்நிறைந்த ஈச்சம் பழத்தினை விரும்புதல் போலாகும்.

*அகலம்* :-

ஆப்த மனையாள் என்ற சொல் ஆத்தமனையாள் ஆயிற்று. ஆப்தம் என்ற வடசொல்லுக்கு உண்மை என்று பொருளாகும்.

காய்ந்த என்ற சொல் காய்ச்ச என்று வந்துள்ளது.

உவமேயத்தில் பிறர்காத்த மனையாள் என்பதற்குப் பொருந்த உவமையில் முள்நிறைந்து முள்ளால் காக்கப்பட்ட ஈச்சம்பழம் என்று கொள்க.

காளையர் என்றசொல் இளங்காளை போன்ற இளைஞரைக் குறிக்கும். அந்த இளைஞரும் இளமைப் பருவத்துக் காளைமாடு ஒன்று வரைமுறை இல்லாமல் கண்டகண்ட பசுக்களை விரும்புவதைப்போல கண்ணால்கண்ட பெண்களை எல்லாம் விரும்புவர்.

## பிராணாயாமப் பயிற்சி வேண்டுமென்பது

**வாயு இருந்திட ஆயுள் இருந்திடும்**
**ஆயுள் இருந்திட காயம் இருந்திடும்**
**காயம் இருந்தால் கருத்தும் இருந்திடும்**
**ஏய அறிவுணர்வு உற்றால் வினையின்றே.**

-(திருமந்திரம் - பா- 3057)

*பொழிப்பு :-*

மூச்சுக்காற்றாகிய பிராணவாயு யோகநூல் முறைப்படி பயிற்சியால் வசப்பட்டிருந்தால் ஆயுள் இருந்திடும். அந்த ஆயுள் இருந்தால் நம் உடம்பு நீண்டகாலம் வாழ்ந்திருக்கும். அவ்வாறு அந்த உடம்பு நீண்டகாலம் வாழுமேயானால் அதனுள் வாழ்கின்ற உயிருக்கு அறிவாகிய கருத்தும் வளரும். பொருந்திய அவ்வறி வாகிய கருத்து மெய்ப்பொருளை உணர்ந்தால் பிறவிக்கு ஏதுவான இரு வினைகளும் இல்லையாகிவிடும் என்க.

*குறிப்பு :-*

பிறவிக்கு ஏதுவாகிய இருவினை இல்லையாகவே அவர் பிறவா நெறியைப் பெறுவர்.

## உடம்பினைப் போற்றுதல்

**உடம்பார் அழியில் உயிரார் அழிவர்**
**திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்**
**உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே**
**உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே.**

(திருமந்திரம்-பாடல்-724)

*பொழிப்பு :-*

உடம்பு என்கின்ற ஒன்று நோய் முதலான காரணங்களால் அழிந்துவிட்டால் உடம்பில் வாழ்ந்திருக்கும் உயிர் சம்பந்தம் அழியப்பெற்று வேறாய் நிற்கும். உடம்பிற்கும் உயிருக்கும்

சம்பந்தம் அழிந்து வேறானால் உயிர் திடமாக மெய்ஞ்ஞானத்தைப் பெற இயலாமல் போய்விடும். அக்காரணத்தினாலே இந்த அழிந்து போகின்ற உடம்பை முதலில் வளர்த்தேன். வளர்த்த அவ்வுடம்பில் உயிரை வாழச்செய்து மெய்ஞ்ஞானப் பயிற்சியுடையவன் ஆனேன்.

*அகலம் :-*

உடம்பும் உயிரும் கூடியிருந்தால்தான் உயிர்க்கு அறிவு முதலானவை நிகழும் என்பதற்கு மேற்கோள்.

*பொழிப்பு :-*

உடம்பு என்கின்ற ஒன்று நோய் முதலான காரணங்களால் அழிந்துவிட்டால் உடம்பில் வாழ்ந்திருக்கும் உயிர், சம்பந்தம் அழியப்பெற்று வேறாய் நிற்கும். உடம்பிற்கும் உயிருக்கும். சம்பந்தம் அழிந்து வேறானால் உயிர் திடமாக மெய்ஞ்ஞானத்தைப் பெற இயலாமல் போய்விடும். அக்காரணத்தினாலே இந்த அழிந்து போகின்ற உடம்பை அழியாமல் சிலகாலம் வைத்திருப்பதற்காக 'காயசித்தி' உபாயத்தை அறிந்து உடம்பை முதலில் வளர்த்தேன். வளர்த்த அவ்வுடம்பில் உயிரை வாழச் செய்து மெய்ஞ்ஞான பயிற்சியுடையவன் ஆனேன்.

*அகலம் :-*

உடம்பும் உயிரும் கூடியிருந்தால்தான் உயிருக்கு அறிவு முதலானவை நிகழும் என்பதற்கு மேற்கோள்.

*'அறிவு அருள் - ஆசை அச்சம் மானம்*
*நிறை பொறை ஓர்ப்பு கடைப்பிடி மையல்*
*நினைவு வெறுப்பு உவர்ப்பு இரக்கம் நாண் வெகுளி*
*துணிவு அழுக்காறு அன்பு எளிமை எய்த்தல்*
*துன்பம் இன்பம் இளமை மூப்பு இகல்*
*வென்றி பொச்சாப்பு ஊக்கம் மறம் மதம்*
*மறவி இணைய உடல்கொள் உயிர்க்கணம்.*

## இதுவும் அது

**உடம்பினை முன்னம் இழுக்கென்று - இருந்தேன்**
**உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்**
**உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்என்று**
**உடம்பினை யான்இருந்து ஓம்புகின்றேனே.**

-(திருமந்திரம் - பா-725)

*பொழிப்பு :-*

முன்னர் மும்மலங்களுள் ஒன்றாகிய மாயையின் காரியமாகிய இந்த உடம்பைக் குற்றமுடையது எனக் கருதி அதன்மேல் பற்றுச் செய்யாமலே இருந்தேன். அதன்பின்னர் அவ்வுடம்பினுள் உறுபொருள் என்னும் மேலான 'பரம்பொருளை' குரு உபதேசத்தாலும் அறிவுநூல் உணர்ச்சியாலும் என் அனுபவ அறிவாலும் கண்டேன். கண்ட அதனால் என் உடம்பாகிய அதனுள் உத்தமனாகிய அவன் கோயில் கொண்டான் எனக்கருதி இந்த உடம்பை இறைவன் எழுந்தருளியிருக்கின்றத் திருக்கோயி லாகவே கருதி ஒரு அன்புத்தொண்டன் திருக்கோயிலைக் காத்துவருதலைப் போல என் உடம்பினைக் காத்து வரலாயினேன்.

## இதுவும் அது

**மலம்என்று உடம்பை மதியாத ஊமர்**
**தவம்என்று வேறு தரித்தமை கண்டீர்**
**நலம்என்று இதனையே நாடி இருக்கில்**
**பலமுள்ள காயத்தில் பற்றும்இவ் அண்டத்தே.**

(திருமந்திரம்-பா-2137)

*பொழிப்பு :-*

உடம்பினை மாயாமல காரியம் என்று கருதி அதனை மதித்துப் போற்றாமல் மௌன சமாதியில் இருப்பவரே! அறிஞர் இவ்வுடம்பை வேறுபட்ட இறைவன் எழுந்தருளியிருக்கும் தலமாக எண்ணி அதனிடத்தே இறைவனை நாட்டி வழிபட்டு வருதலைக் கண்டீர் அன்றோ? இந்த அண்டத்திலேயே பயனுள்ள நல்ல உடம்பைப் பெற்று வாழ்வீர்.

*அரும்பதம்* :-

ஊமர் என்றது மௌனசமாதியில் இருப்பவரை அவரை விளித்துச் சொல்லியதால் இதுவிளி.

*அகலம்* :-

வீரசைவர் தூலஉடம்பில் இட்டலிங்கத்தையும், சூக்கும உடம்பில் பிராணலிங்கத்தையும், காரணஉடம்பில் பாவ லிங்கத்தையும் தரித்து வழிபடும் வழக்கத்தை அறிக. அதுவன்றி, உடம்பின்கண் யோகிகள் மூலாதாரத்தில் பிரமனையும், சுவாதிட்டானத்தில் திருமாலையும், மணிபூரகத்தில் உருத்தி ரனையும், விசுத்தியில் மகேசுரனையும், அநாகதத்தில் சதா சிவனையும், ஆக்ஞையில் பரசிவத்தையும், வைத்து வழிபடுகின்ற வழக்கம் உண்டு.

மேற்கண்ட பாடல்களுக்கு எடுத்துக்காட்டாய்ப் பாடிய ஆசிரியர் பாட்டு.

*'உடம்பை இழித்து உயிரினைப் போற்றேன்*
*உடம்பினைப் போற்றி உயிரை இழிக்கேன்*
*உடம்பை உயிரை ஒக்கவே பேணி*
*திடம்பட மெய்ஞ்ஞானம் சேர்ந்து நின்றேனே.'*

## உலகமக்கள் மதிக்கப்படுவோன் செய்யத்தக்கது

**பிறரால் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்**
**மறவாதே நோற்பது ஒன்றுஉண்டு - பிறர்பிறர்தம்**
**சீரெல்லாம் தூற்றி சிறுமை புறங்காத்து**
**யார்யார்க்கும் நன்மை சொலல்.**

-நீதிநெறிவிளக்கம் (குமரகுருபரர்.)

**பொழிப்பு**:-

மற்றவரால் பெரிய மதிப்பைப் பெறக்கருதிய ஒருவன் மறந்துவிடாமல் உறுதியாகப் பற்றவேண்டிய செயல் ஒன்று உண்டு. அதுயாதெனில் மற்றவரின் சிறப்பை எல்லாம் உலகம் அறியும்படி நன்றாக வெளிப்படுத்திப் பேசுதலும், அவரிடத்தில் குற்றம் இருப்பின், அதனை வெளியில் சொல்லாமல், மனத்துள் அடக்கி யிருத்தலும், மற்று எல்லோரிடத்திலும், எல்லோர்க்கும், நல்ல வற்றையே பேசுதலும் ஆகிய இப்பண்பு ஒன்றாகும்.

### *இந்நூலின் அச்சகச் செலவினை, ஏற்றுக் கொண்ட நன்கொடையாளர்கள்:-*

| | |
|---|---|
| திரு.அடிகளாசிரியர் தலைவர் | உரூ.1000/- |
| கோவி. ரெங்கசாமி | 1000/- |
| ஆ.சுந்தரராஜன்செயலர் | 1000/- |
| கு.குருநாதன் துணைத்தலைவர் | 500/- |
| குரால் கூட்டுறவு வங்கி அலுவலர்கள் | ~~500~~/- |
| மு.துரைசாமி | 500/- |
| பெ.பொன்னுராஜ் | 500/- |
| அ.மணிவண்ணன் | 500/- |
| தா.பழனிமுத்து | 500/- |
| இரா.பெருமாள் | 500/- |
| மு.செல்வராசு | 500/- |
| பூ.உத்தரபாலன் | 200/- |
| க.இராமசந்திரன் | 200/- |
| மு.மணி | 200/- |
| து. ஆறுமுகம் | 200/- |

மேற்கண்ட அனைவருக்கும் சங்கம் நன்றியையும் வாழ்த்தினையும் தெரிவித்துக்கொள்கிறது.

இங்ஙனம்,

**பதிப்புக்குழு,**

***குகையூர்த்தமிழ்ச்சங்கம்,***

**குகையூர்.**

# அடிகளாசிரியர் படைப்புகள்

## உரை நூல்கள்

### அ). உரைப் பதிப்புகள் (உரையோடு விளங்கிய நூல்களைப் பதிப்பித்தல்)

1. அருணகிரி அந்தாதி - சரசுவதி மகால் வெளியீடு 1967
2. மருதூரந்தாதி உரை - சரசுவதி மகால் வெளியீடு 1968
3. காலச்சக்கரம் - சரசுவதி மகால் வெளியீடு 1969-79
4. வராகர் ஓராசாத்திரம் (சோதிட நூல்) - சரசுவதி மகால் வெளியீடு 1970-8-91
5. சிவஞான தீபம் உரை - சரசுவதி மகால் வெளியீடு 1970
6. சிவப்பிரகாச விகாசம் உரை - சரசுவதி மகால் வெளியீடு 1977

### ஆ). உரைவரைவுகள் (தாமே உரை எழுதி வெளியிட்டவை)

7. முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் உரை 1938
8. சேக்கிழார் பிள்ளைத் தமிழ் உரை 1967
9. தமிழகக் கல்வெட்டு விளக்கவுரை (மு.கோவிந்தராசனாருடன் இணைந்து எழுதியவை) 1967-68
10. திருவலஞ்சுழி தேவாரப்பாடல்கள் உரை 1956
11. திருவாசகக் கோயில் திருப்பதிகம் உரை 1981
12. சிவபுராணச் சிற்றுரை 1986-99
13. சதமணிமாலை மூலமும் உரையும் 1990
14. சித்தாந்த சிகாமணி அங்கத்தலத் திரட்டு உரை 1992
15. ஸ்ரீமத் சிவஞான பாலயதேசிகர் திருப்பள்ளி எழுச்சி உரை 1993
16. குதம்பைச்சித்தர் பாடலும் உரையும் 1999
17. இட்டலிங்க அபிடேக மாலை மூலமும் உரையும் 2001
18. சசிவன்ன போதம் மூலமும் உரையும் 2002

## 2.பதிப்பு நூல்கள்
(ஓலைச் சுவடிகளிலிருந்து பதிப்பித்தவை)

19. பஞ்சதிகார விளக்கம் மூலமும் உறையும் 2003
20. வீரசைவப் பிரமாணம் 1936
21. சதமணிமாலை (மூலம் மட்டும்) 1938
22. சிவப்பிரகாச விசாகம் (மூலம் மட்டும்) 1939
23. காமநாதர் கோவை 1957
24. மேன்மைப்பதிகம் 1957
25. சதுர்லிங்க தசகோத்திர சதகம் 1958

## 3.ஆராய்ச்சி நூல்கள்

26. தொல்காப்பியம்-எழுத்து-இளம்பூரணம் (அரிய ஆராய்ச்சிப் பதிப்பு) 1966
27. 'ஐவகையடியும்' என்னும் தொல்காப்பிய நூற்பா விளக்கம் (சென்னைப்பல்கலைக்கழகம்) 1977
28. தமிழ் இலக்கண இலக்கியங்களில் சைவசித்தாந்தம் 1978
29. தொல்காப்பியம்-பொருள்- இளம்புரணம் (தமிழ்ப்பல்கலைக்கழகம்) 1990

30. தொல்காப்பியம்-பொருள்-செய்யுளியல் (தமிழ்ப்பல்கலைக்கழகம்) 1985
31. தொல்காப்பியம்-பொருள் எட்டுஇயல் மட்டும் (தமிழ்ப் பல்கலைக்கழகம்) (அச்சில்)

## 4.படைப்பிலக்கிய நூல்கள்

### அ) செய்யுள் வடிவம்

32. பிள்ளைப்பாட்டு 1945
33. திருஅரசிலிக்காதை 1948
34. குழந்தை இலக்கியம் 1963
35. சான்றாண்மை (கோப்பெருஞ்சோழன் பற்றியது 1964-1975
36. சென்னிமலை முருகன் தோத்திரம் 1980
37. அரசியல் இயக்கம் 1981
38. பல்சுவைப் பண்ணத்தில்ப் பாடல்கள் (குழந்தை இலக்கியம்) 1983
39. அருள்திரு மாரியம்மன் திருப்பதிகம் 1984
40. உளத்தூய்மை 1984-94
41. தண்ணிழல் (திருமுடிக்காரியைப் பற்றிய அரிய இலக்கியம்) 1990
42. மறவர் நத்தக்குன்றமரும் திருமுருகன் 1993
43. தொழிலியல் 1993
44. மெய்ப்பொருட் காதை (மெய்ப்பொருள் நாயானார் வரலாறு)
45. தமிழ்மாண்பும் தமிழ்த்தொண்டும் (தமிழியக்க வெளியீடு) 1996
46. ஒன்பான்கோள் வணக்கப்பாடல்கள் (தமிழயக்க வெளியீடு) 1996
47. சிறுவர் இலக்கியம் 2003-04


### ஆ) உரைநடை

48. எங்களூர் 1937
49. தொடக்கப்பள்ளி - நாடகம் 1949
50. வீரசைவ சிவ பூஜாவிதி
51. விலையேற்றமும் வாழும் வழியும் 1949
52. திருமூலரும் பேருரையும் (தமிழக அரசின் முதற்பரிசு பெற்றநூல்) 1998
53. காயத்துள் நின்ற கடவுள் 1999
54. திருவாசக அநுபூதி 2000
55. கீதையின் அறிவுப் பொருள் 2000
56. திருமந்திர உணர்வு 2001
57. தொல்காப்பியச் செய்யுளியல் - உரைநடை (அச்சில்)

### பொருள் முட்டுப்பாட்டினால் முடங்கிக் கிடக்கும் அச்சேறா நூல்கள்

1. கலித்தொகை உரை (குறிஞ்சி கலி)
2. பிரபுலிங்கலீலை உரை
3. அடிகளாசிரியரின் சமுதாயப் பாடல்கள்
4. அடிகளாசிரியரின் இலக்கியக் கட்டுரைகள்
6. திருக்குறள் உரை (133 குறள் வரை)
7. முப்பால்-உரைநடை
8. சிவஞான பாலைய சுவாமிகள் கலம்பகம் மூலமும் உரையும்

# 2004 - 2006 ஆம் ஆண்டிற்கான செயற்குழு உறுப்பினர்கள்




அமர்ந்திருப்பவர்கள் : **இடமிருந்து வலம்** 1. **அ.செங்கமலம்** பொருளாளர், 2. **கோவி.ரெங்கசாமி** செயலாளர், 3. **கு.குருநாதன்** துணைத்தலைவர், 4. **மு.இராசமாணிக்கம்** செ.கு.உறுப்பினர், 5. **அ.இராமசாமி** செ.கு.உறுப்பினர்,

நிற்பவர்கள் **இடமிருந்து வலம்** : 1. **சீ.பத்மாவதி** செ.கு. உறுப்பினர், 2. **இரா.கமலம்** சங்க உறுப்பினர், 3. **சி.முருகேசன்** செ.கு.உறுப்பினர், 4. **மோகனசுந்தர்** செ.கு. உறுப்பினர், 5. **வை.பெரியசாமி** துணைச்செயலர் 6. **பெ.பொன்னுராஜ்** செ.கு.உறுப்பினர், மற்றும் **இரா.ரவிச்சந்திரன்** துணைச்செயலர்

குகையூர்த் தமிழ்ச் சங்க வெளியீடு-2

# நல்லவை நாற்பது



தொகுத்து உரையெழுதியவர்
பேராசிரியர் திரு. அடிகளாசிரியர்

"அல்லவை தேய அறம்பெருகும்; நல்லவை
நாடி இனிய சொலின்."
- திருக்குறள்

## இதன் உரை

நல்ல செயல்களை ஒருவர் ஆராய்ந்து எடுத்துக் கொண்டு அதனைத் தம் சொல்லிலே வைத்து இனிமையாகக் கூறுவாரேயானால், அவர்க்கு அவர் செய்த பாவம் நீங்கும் மேலும் நல்ல புண்ணியமும் உண்டாகும்

மேற்கண்ட திருக்குறளின் கருத்துப்படி ஒருவர் நல்லவை நாற்பது என்னும் இந்நூலைப் பயின்று உலகிற்குக் கூறி வருவாரேயானால், அவர்க்கு அவர் செய்த பாவம் நீங்குவதோடன்றி புண்ணியமும் உண்டாகும்! என்க.

லிபர்ட்டி பிரிண்டர்ஸ், கள்ளக்குறிச்சி. ✆ 223017